# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு

## 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. வெந்ததே சிந்தை என்ற கவிதையினை எழுதியவர்

அ) மன்னார்அமுதன் ☐ ஆ) தாமரைக்கண்ணன் ☐

இ) சுப்பிரமணியம் ☐ ஈ) உருத்திரமூர்த்தி ☐

2. புறநானூறு

அ) கடைக்கழக நூல் ☐ ஆ) முதற்கழக நூல் ☐

இ) இடைக்கழக நூல் ☐ ஈ) முக்கழக நூல் ☐

3. மடுசீமாவில் இருந்து ஊறத்தொடங்கி கிழக்கு மாகாணத்துள் ஓடிய ஆறு

அ) மகாவலி ☐ ஆ) பட்டிப்பளை ☐

இ) களனி ☐ ஈ) அருவி ☐

4. தாமரை என்பது

அ) பொதுமொழி ☐ ஆ) பயனிலை ☐

இ) தொடர்மொழி ☐ ஈ) வேற்றுமை ☐

5. “கொடி விசும்பு நிழற்றும்” இதில் விசும்பு என்பது

அ) நிலம் ☐ ஆ) காற்று ☐

இ) வானம் ☐ ஈ) தீ ☐

6. விசயன் இலங்கைக்கு வந்த ஆண்டு

அ) கி.மு. 200 ☐ ஆ) கி.மு. 500 ☐

இ) கி.பி. 500 ☐ ஈ) கி.பி. 200 ☐

7. "பரிந்தோம்பிக் காக்க"என வள்ளுவர் கூறுவது

அ) உயிரை ☐ ஆ) அன்பை ☐

இ) கல்வியை ☐ ஈ) ஒழுக்கத்தை ☐

8. **ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது நாநாழி** எனக் கூறியவர்

அ) திருவள்ளுவர் ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) ஔவையார் ☐ ஈ) தொல்காப்பியர் ☐

9. சொல்லின் இறுதியில் வரும் மெய் எழுத்துகள்

அ) க் ங் ச் ட் த் வ் ☐ ஆ) க் ச் ட் த் ப் ற் ☐

இ) ய் ர் ல் ழ் ள் ண் ம் ன் ☐ ஈ) க் ச் ட் த் ப் ற் வ் ங் ☐

10. நீலம் என்னும் மலர் __________ நிலத்துக்குரியது.

அ) குறிஞ்சி ☐ ஆ) பாலை ☐

இ) நெய்தல் ☐ ஈ) மருதம் ☐

11. பாடல் வரிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது

அ) தளை ☐ ஆ) எதுகை ☐

இ) தொடை ☐ ஈ) மோனை ☐

12. விட்டுணுவைப் பாடுபொருளாகக் கொண்டு பிரபந்தங்கள் பாடியோர்

அ) நாயன்மார்கள் ☐ ஆ) ஆழ்வார்கள் ☐

இ) பல்லவர்கள் ☐ ஈ) சோழர்கள் ☐

13. செய்து என்பது

அ) இடைத்தொடர் ☐ ஆ) உயிர்த்தொடர் ☐

இ) நெடிற்றொடர் ☐ ஈ) வன்தொடர் ☐

14. "வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்" இதில் உள்ள அணி

அ) உவமையணி ☐ ஆ) உயர்வுநவிற்சி அணி ☐

இ) உருவகஅணி ☐ ஈ) தற்குறிப்பேற்றஅணி ☐

15. **மக்கள் சக்தி பேராற்றல் வாய்ந்தது** என்பதை விளக்கும் பழமொழி

அ) சிறுதுளி பெருவெள்ளம் ☐

ஆ) நிறைவற்ற மனம் ☐

இ) ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம் ☐

ஈ) பட்டறிவு பயன்தரும் ☐

16. வேங்கடம் தொட்டு தென்குமரி வரையான தென்னிந்தியப் பெருநிலப்பரப்பை ஆண்டவர்கள்

அ) ஆரியர் ☐ ஆ) மூவேந்தர் ☐

இ) பல்லவர் ☐ ஈ) களப்பிரர் ☐

17. மேற்கிலிருந்து வீசும் காற்று

அ) கோடை ☐ ஆ) வாடை ☐

இ) கொண்டல் ☐ ஈ ) தென்றல் ☐

18. வந்தான் என்னும் சொல்

அ) படர்க்கை ஒருமை ☐ ஆ) தன்மை ஒருமை ☐

இ) முன்னிலை ஒருமை ☐ ஈ ) படர்க்கைப் பன்மை ☐

19. கடி என்பது

அ) செழிப்பு ☐ ஆ) நறுமணம் ☐

இ) பூந்தாது ☐ ஈ ) பூவிதழ் ☐

20. காவலன் என்ற சொல்லின் விகுதி

அ) அன் ☐ ஆ) ன் ☐

இ) லன் ☐ ஈ ) வலன் ☐

21. உரிய அகவை வருமுன்னரே முடி சூடியவன்

அ) நெடுஞ்செழியன் ☐ ஆ) பெருஞ்சேரலாதன் ☐

இ) கரிகாற் பெருவளத்தான் ☐ ஈ ) செங்குட்டுவன் ☐

22. புளிக்காய் என்பது

அ) வினைத்தொகை ☐ ஆ) உவமைத்தொகை ☐

இ) அன்மொழித்தொகை ☐ ஈ ) பண்புத்தொகை ☐

23. **பெண்டிரும் பிணியுடையீரும் பேணி...** இதில் பிணியுடையீர்என்ற சொல் குறிப்பது

அ) பெண்களை ☐ ஆ) ஆண்களை ☐

இ) நோயாளரை ☐ ஈ ) மருத்துவரை ☐

24. பாடினான் என்ற வினைமுற்றில் 'இன்' என்பது

அ) பகுதி ☐ ஆ) விகுதி ☐

இ) இடைநிலை ☐ ஈ) சந்தி ☐

25. தமிழர்பண்பாடு என்பது ______________ த் தொகையாகும்.

அ) 2ஆம் வேற்றுமை ☐ ஆ) 6ஆம் வேற்றுமை ☐

இ) 3ஆம் வேற்றுமை ☐ ஈ) 4ஆம் வேற்றுமை ☐

26. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உயிரினங்களை ஆறாக வகுத்ததைக் கூறும் நூல்

அ) புறநானூறு ☐ ஆ) கலித்தொகை ☐

இ) தொல்காப்பியம் ☐ ஈ) குறுந்தொகை ☐

27. நல் + தாய்

அ) நல்தாய் ☐ ஆ) நட்தாய் ☐

இ) நற்றாய் ☐ ஈ) நற்தாய் ☐

28. தமிழரின் இறை வழிபாட்டில் சமற்கிருதமொழியைப் புகுத்தியவர்

அ) களப்பிரர் ☐ ஆ) ஆரியர் ☐

இ) மூவேந்தர் ☐ ஈ) அந்தணர் ☐

29. யாழ் குடாநாட்டு மக்கள் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக ஒரே இரவில் வெளியேறிய ஆண்டு

அ) 1990 ☐ ஆ) 1998 ☐

இ) 1995 ☐ ஈ) 1996 ☐

30. வெண்மதி பசியினால் ____________க் காணப்பட்டாள்.

அ) வாடிவதங்கி ☐ ஆ) கண்ணும்கருத்துமாக ☐

இ) இன்பதுன்பமாக ☐ ஈ) கல்லும்முள்ளுமாக ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற அரச மொழிச் சட்டத்தை எதிர்த்து, அமைதிவழிப் போராட்டங்களில் ஈடுபட்டார். 1956ஆம் ஆண்டில் தலைமை அமைச்சராக இருந்த பண்டாரநாயக்காவைச் சந்தித்து, தமிழ்மொழிக்குச் சமவுரிமை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். அக்கோரிக்கையில் ''சிங்கள மொழியுடன் தமிழ்மொழிக்கும் சமவுரிமை வழங்கப்படுகிறது'' என்று பிரித்தானிய அரசால் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்ட ஆவணத்தைக் கோடிட்டுக் காட்டினார். ''தமிழரை வாள்முனையில் அடக்குவேன்'' என்று ஆணவத்துடன் அடிகளாருக்கு விடை கூறினார் பண்டாரநாயக்கா. இதனால், நாடெங்கும் தமிழ் மக்கள் புரட்சி செய்தனர். இதன் காரணமாகப் பண்டாரநாயக்கா தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்களுடன் மாநில தன்னாட்சி வழங்க இணங்கும் ஒப்பந்தம் ஒன்றை 1957 இல் செய்து கொண்டார். அதற்கு பண்டாசெல்வா ஒப்பந்தம் என்று பெயர். இதனைப் புத்தபிக்குகளும் கடுங்கோட்பாட்டாளர்களும் எதிர்த்தனர். இதனால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இருந்தும், பண்டாரநாயக்கா தமிழருக்கு உரிமை கொடுக்கின்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார்.

1. பண்டா - செல்வா ஒப்பந்தம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது?

2. சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற மொழிச் சட்டத்தை எதிர்த்தவர் யார்?

3. பிரித்தானிய அரசால் கையொப்பமிடப்பட்ட ஆவணத்தில் குறிப்பிட்டிருந்த செய்தி யாது?

4. தமிழர் தந்தை எனக் குறிப்பிடப்பட்டவரின் பெயரைத் தருக.

5. பண்டாரநாயக்காவை ஏன் சுட்டுக் கொன்றனர்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சிந்துவெளியில் அமைந்திருந்த இருபெரும் நகரங்களும் எவை?

2. தமிழரின் ஏதிலி வாழ்வு எப்போது தொடங்கியது? இதற்குக் கரணியம் யாது?

3. "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்" என்பதன் கருத்து என்ன? ஒழுக்கமுடைமையின் பின்னுள்ள அதிகாரம் எது?

4. பாவேந்தர் கனகசுப்புரத்தினத்தின் கவிதைகள் எவற்றை எதிர்த்து எழுதப்பட்டுள்ளன?

5. திருக்குறளின் பொருள் விரிவுக்கு ஔவையார் கூறிய உவமை எது?

6. "குன்றின் அருவிதாழ் மாலைச்சுனை" என்னும் பாடலைப் பாடியவர் யார்? இப்பாடல் இடம்பெற்ற நூலின் பெயரைத் தருக.

7. மான வீரத்தில் சோழனுக்கும் சேரனுக்கும் ஏற்றத்தாழ்வின்மையைக் காட்ட புலவர் கையாண்ட உவமையைத் தருக.

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



எழுக தமிழ்! எழுக தமிழ்!
எரிமலையாய் நிமிர்க தமிழ்!

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் மரபுத்தொடர்கள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

இணைமொழி ____________________

அடுக்கிடுக்குத்தொடர் ____________________

அடுக்குத்தொடர் ____________________

2. பின்வருவன இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

செயப்பாட்டுவினை ____________________

செயப்படுபொருள் குன்றியவினை ____________________

செயப்படுபொருள் குன்றாவினை ____________________

3. இறந்தகால இடைநிலைகள் எவை? ____________________

அவற்றில் நான்கிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

________________ ________________

________________ ________________

4. எடுத்துக்காட்டுகள் தருக.

குற்றியலுகரப் புணர்ச்சி ________________

இறந்தகாலப்பெயரெச்சம் ________________

உரிச்சொல் ________________

5. பின்வரும் ஆகுபெயர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

சினையாகுபெயர் ____________________

குணவாகுபெயர் ____________________

காலவாகுபெயர் ____________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக**

ஒரு பண்பாடோ சமயமோ நிலைத்திருக்க வேண்டுமாயின் காலத்துக்குக்காலம் தோன்றும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்கும் முகம்கொடுக்கும் ஆற்றல் பெற்றதாக இருத்தல் வேண்டும். பழைய பெருமைகளில் தன்னை இழந்துவிடாது பழையவற்றுள் உதவாதவற்றை ஒதுக்கிவிட்டு உகந்தவற்றைப் பேணிக்கொள்ள அணியமாய் இருத்தல் வேண்டும். முன்னைய காலங்களில் ஈட்டிய பட்டறிவுகளைத் துணையாகக் கொள்வதோடு எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய புதிய முயற்சிகளிலும் முனைந்து நிற்றல் வேண்டும். பழையதை விடாமலும் புதியதை முற்றும் ஒதுக்காது இருத்தல் இயலாத செயலாகும். அந்த வகையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் பற்றி எண்ணிப்பார்த்தல் பயனுடையதாகும். மாற்றங்கள் எல்லாக்காலப் பகுதியிலும் நிகழ்ந்துள்ளன. ஆயினும், வரலாற்றைத் திரும்பிப் பார்க்குமிடத்து மாறுதல்கள் எமது காலத்தில் மிகுந்து காணப்படுவதைக் கண்டுகொள்ளலாம். மரபுவழி முறைகளை அப்படியே கடைப்பிடிக்கும் தன்மையும் புதியவற்றைக் கடைப்பிடிக்கும் துணிச்சல் குறைவும் இருந்தாலும் புதிய மாறுதல்கள் பெரும்பாலும் வரவேற்கப்படுகின்றன.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 5

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஈழத்தமிழரும் ஏதிலி வாழ்வும்
- நீர் தமிழ் ஆசிரியரானால்!
- பல்லினப் பண்பாட்டின் இடையில் நான்!

புள்ளிகள் 20